SRI LANKA
IMMIGRATION AND EMIGRATION

திகதி : 2022.06.16
இலக்கம் : 29

**ஊடக அறிவித்தல்**
**குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களம்**

ரஷ்யாவுக்கும் உக்ரைனுக்கும் இடையில் உருவான புவிசார் அரசியல் நெருக்கடி காரணமாக அந்தப் பிராந்தியத்தில் விதிக்கப்பட்டுள்ள வான்வெளி தடைகள் மற்றும் விமான சேவைகள் செயல்படாத காரணத்தினால் ரஷ்ய மற்றும் உக்ரேனிய சுற்றுலாப் பயணிகள் தங்கள் சொந்த நாடுகளுக்குத் திரும்ப முடியாத நிலைமைத் தோன்றியுள்ளது.

எனவே, 2022.02.28 ஆம் திகதியளவில் செல்லுபடியாகும் சுற்றுலா வீசாவைக் கொண்டிருக்கும் ரஷ்ய மற்றும் உக்ரைன் நாட்டு சுற்றுலாப் பயணிகளுக்கு 2022.07.22 ஆம் திகதி வரை மேலும் 01 மாத காலத்திற்கு இலவசமாக வீசா நீட்டிக்கப்பட்டுள்ளது. **இலவச வருகை வீசா (visit visa) நீடிப்புக்கு தகுதியுடையவர்கள் இணையத்தளத்தின் ஊடக விண்ணப்பிக்க முடியும் அல்லது குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களத்தின் தலைமை அலுவலகத்திற்கு வருகைத்தந்து வீசா நீடிப்பைப் பெற்றுக்கொள்ள முடியும்**.

மேலும், இந்த சுற்றுலாப் பயணிகள் மீண்டும் தங்கள் சொந்த நாடுகளுக்கு திரும்பும் போது எந்தவித இடையூறும் இன்றி இலங்கையின் விமான நிலையங்களில் இருந்து வெளியேற தேவையான வசதிகள் செய்யப்பட்டுள்ளன.

**கட்டுப்பாட்டாளர் நாயகம்**
**குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களம்**